# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

# O.S. No.49/2022

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 24.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரவிச்சந்திரன் (PW–1) | வயது | : | 57/2025 |
| த/க பெயர் | : | திரு. சிவமணி | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | ஆலங்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் ஆலங்கோட்டை கிராம சர்வேஎண்.207BA/4A, விஸ்தீரணம் 22 ½ குழி, 8 செண்ட். யாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சித்தப்பா மகன் ராமலிங்கம், ராமலிங்கம் மனைவி வெண்ணிலா, அவரது மகள் வினோதினி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எந்த வகையை சேர்ந்தது என்றால் காலி மனை. தாவா சொத்து எனது வீட்டிற்கு அருகில் உள்ளதா என்றால் தென்புறம் உள்ளது. எனது வீடு எந்த பக்க வாசப்படி உள்ளது என்றால் தெற்கு திசை வாசப்படி கொண்டது. எனது வீட்டில் கதவிலக்கம் என்னவென்றால் மூன்று பழைய ஓட்டு வீடு உள்ளது, க.எண்.458, 459, 460. மூன்று வீடும் ஒரோ வளாகத்தில் உள்ளது.
2) மூன்று வீடுகளும் தொடர்ச்சியாகவும், தெற்கு பார்த்த வாசப்படி என்றால் சரிதான். இந்த மூன்று வீடுகளையும் யார் கட்டியது என்றால் எனது தகப்பன் வழி பாட்டி செங்கம்மாள் கட்டியது. செங்கம்மாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் செங்கம்மாள் கணவர் மாரியப்ப தேவர், செங்கம்மாள் மற்றும் மாரியப்ப தேவருக்கு கோவிந்தராசு, எனது அப்பா சிவமணி, காசிநாதன். பெண் குழந்தைகள் உள்ளனரா என்றால் இல்லை. மூன்று வீடுகளும் மாரியப்ப தேவர் அடுத்து செங்கம்மாள், அடுத்து மூன்று குழந்தைகளுக்கும் கிடைத்ததா என்றால் ஆமாம்.
3) செங்கம்மாள் எப்போது இறந்தார் என்றால் 1981 வாக்கில் இறந்தார். செங்கம்மாள் அவரது மூன்று குழந்தைகளுக்கும் ஏதேனும் ஆவணங்கள் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. செங்கம்மாளின் மகன்களான கேவிந்தராசு, சிவமணி, காசிநாதன் ஆகியோர் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா என்றால் இல்லை. செங்கம்மாளின் மகன்களான கேவிந்தராசு, சிவமணி, காசிநாதன்

ஆகியோர்களுக்கு சட்டப்படி வாரிசுதாரர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்றால் 17 பேர் உள்ளனர்.

4) தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்ததாக இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் எனது அப்பா 1993 இல் செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 மூலம் எழுதி கொடுத்த வகையில் கிடைத்ததாக சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும்போது எனக்கு வயது எவ்வளவு என்றால் நான் பள்ளிக்கூடம் படித்து முடித்திருந்தேன், வயது ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிய விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்து தனக்கு எவ்வாறு கிடைத்தது என்று எனது அப்பா சொல்லியுள்ளாரா என்றால் பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளார். பூர்வீக சொத்து என்று சொல்லியது சரியா என்றால் தவறானது. செங்கம்மாளின் மூன்று மகன்களும் பாகப்பத்திரம் மூலம் கிடைத்ததாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்துடன் மூல ஆவணம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. எனது குடும்ப பூர்வீக பிரிபடாத சொத்தில் எனது தகப்பனாருக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி வைக்க எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் OS.NO.174/2019 என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கிலும் மூன்று வீடுகளுக்கும் சேர்ந்து வழக்கு நடக்கிறது என்றால் சரிதான்.

6) மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் OS.NO.174/2019 வழக்கில் எதிர் தரப்பினராக எத்தனை நபர்களை சேர்த்துள்ளேன் என்றால் 9 நபர்களை சேர்த்துள்ளேன். அந்த வழக்கில் தாவா சொத்தின் சர்வே எண் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் OS.NO.174/2019 வழக்கின் வழக்குரை என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த வழக்கில் 08.08.2025 மற்றும் 16.09.2025 இல் பிரதிவாதியின் வழக்கறிஞர் என்னை குறுக்கு விசாரணை செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் இதே வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்து தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

7) இந்த வழக்கில் மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் OS.NO.174/2019 வழக்கு விபரங்களை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஏன் சொல்லவில்லை என்றால் இந்த வழக்கிற்கு அவசியம் இல்லை என்பதால் சொல்லவில்லை, மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் OS.NO.174/2019 சொல்லியுள்ள சொத்து எனது பாட்டி செங்கம்மாளுக்கு சொந்தமான சொத்து, தாவா சொத்தானது எனது அப்பாவிற்கு சொந்தமான சொத்து என்பதால் சொல்லவில்லை. தாவா சொத்தானது

எனது பாட்டி செங்கம்மாளிடமிருந்து எனது அப்பாவிற்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல.

8) தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்து இல்லை என்பதுதான் எனது கட்சி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவா சொத்தானது பூர்வீக சொத்து என்று தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்கை படித்து பார்த்தேனா என்றால் படித்து பாரத்தேன். எனது வழக்குரையில் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களும் எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்து என்று பாரா 1 இல் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான், ஆனால் தவறாக சொல்லப்பட்டுள்ளது.

9) தாவா சொத்தானது கோவிந்தராஜ், காசிநாதன், எனது அப்பா சிவமணி ஆகியோர்களின் வாரிசுகளான 17 பேர்களுக்க சொந்தமான சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு தனிப்பட்டு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மையை கூறாமல் மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் OS.NO.174/2019 அந்த வழக்கின் தன்மையை மறைத்து தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.25 10:16:11 +0530

District Munsif
Mannargudi.